* 353 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether this Government has any concrete programme to end drinking water scarity and to provide enough supply of drinking water at Pallavaram and its neighbourhood; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) &(இ) பல்லாவரம்—ஆலந்தூர் நகரங்களுக்குக் குடிநீர் வழங்க ஓர் அடங்கல் திட்டம் ரூபாய் 173.32 லட்சம் செலவில் நிறைவேற்றிடவும், அதனைப் பேணிக்காக்க ஆண்டுதோறும் ரூபாய் 3.76 லட்சம் செலவிடவும் அரசு தனது 24—1—1972-ம் தேதியிட்ட பொதுப்பணித்துறை ஆணை எண் 122-ல் அனுமதி வழங்கியுள்ளது.

மருத்துவ மனைகள்

** 354 வினா—திரு. ந. நாச்சியப்பன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கராபுரம் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையில் கட்டடங்கள், மருத்துவர் குடியிருப்பு இல்லங்கள் அத்தனையுடன் அரசாங்க மருத்துவமனை ஏற்படுத்த இலவசமாக இடங்கள் அளிப்பதாக சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் தீர்மானம் நிறைவேற்றி 1970-ம் ஆண்டு அரசுக்கு அனுப்பியுள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) மக்கள் நல்வாழ்வு குடும்பநலத்துறை இயக்குநர், சங்கராபுரம் ஊராட்சி ஒன்றிய தீர்மானத்தை அரசுக்கு அனுப்பி வைத்து அதற்கான திட்டத்தையும் அனுப்பியுள்ளார்.

(இ) இத்திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளது.

** 355 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடம்பூர் மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்ட பணம் ஒதுக்கப்பட்டதில், தாய்-சேய்